*1972 ஆகஸ்டு 9]*

## *Representation to the Collector of North Arcot*

*11 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a* whether any representation has been made to the Collecfor of North Arcot by the representative of Arni Taluk Agriculturists' Association about 4th April 1972;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

## *வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையீடு*

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் :** *மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) ஆரணி வட்ட உழவர்கள் சங்கப் பிரதிநிதி 1972, ஏப்ரல் 4-ஆம் நாள் அளவில் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முறையீடு ஏதேனும் செய்துள்ளாரா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?*

*(உ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது?*

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** *(அ) ஆரணி விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும், பிறரும் ஜமாபந்தி அதிகாரியை வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆரணி வட்ட அலுவலகத்தில் 3-4-1972-ல் சந்தித்தனர்.*

*(இ) & (உ) ஆரணி வட்டம் முழுவதும் பருவ நிலைமைகள் மோசமாக இருந்ததினால், அரசிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவது தங்களுக்குக் கடினமாக உள்ளது என்று அவர்கள் முறையிட்டதுடன், நிலவரியையும் கடன்களையும் வசூலிப்பதைத் தள்ளிப் போடுமாறும் வேண்டினர். அன்றியும் "அன்னவாரியம் சான்றிதழ்" வழங்குமாறும் அவர்கள் வலியுறுத்தினர். விவசாயிகள் சங்கம் கேட்டுள்ள வண்ணம் நிலவரி, கடன்கள் ஆகியவற்றை வசூலிக்கும் பணியினைத் தள்ளிப் போடும் அளவுக்கு பருவ நிலைமைகள் மோசமாக இல்லை என்று விரிவான விசாரணைக்குப் பின்னர் ஜமாபந்தி அதிகாரி கருதினார். "அன்னவாரியம்" சான்றிதழ்" கொடுப்பதற்கான அவசியம் இல்லை என்றும் அவர் கருதினார்.*

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS